# இசுலாம் சமயத்தின் தனித்தன்மைகளுள் ‘தவ்ஹீது கோட்பாடு’ நோக்கும் போக்கும்

50

**முனைவர் கா.மைதீன்**
**உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (பொறுப்பு)**
**இஸ்லாம் மற்றும் இஸ்லாமியத் தமிழியல் துறை**
**மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21.**
**மின்னஞ்சல் : kmaideenmku@gmail.com**

**முன்னுரை**

இசுலாம் சமயத்தின் தனித்தன்மைகளுள் முதன்மையானதும், மூலமானதும் தவ்ஹீது கோட்பாடே ஆகும். உலகில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அடிநாதமாகச் இக்கோட்பாட்டினால் செயல்பட முடியும் என்பதில் இசுலாம் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே, திருமுறையின் சமய நல்லிணக்கக் கருத்துகளை உணர்த்தும்போது முதன்மைநிலை பெறுவது ‘தவ்ஹீது கோட்பாடே’ ஆகும். இக்கோட்பாட்டைப் புரிந்து செயல்படும்போது உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் நல்லிணக்கத்திற்குள் தன்னைத்தானே பிணைத்துக்கொண்டவனாகத் திகழ்வான். எனவே, தவ்ஹீது கோட்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்கும் உள்ள உறவுநிலைகளை விவரிப்பதாக இக்கட்டுரையின் நோக்கும் போக்கும் அமைகிறது.

**தவ்ஹீது கோட்பாடு – விளக்கம்**

இசுலாம் சமயத்தின் தோற்றம் மனிதசமூகத்தின் தோற்றத்துடன் தொடர்புடையதாக இருந்தாலும் அதன் முழுமைத்துவம் என்பது கி.பி.631 இல் உலக வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. இக்குறிப்பிட்ட காலகட்டத்தில்தான் இசுலாம் சமயத்தின் மறைவேதமான திருக்குர்ஆன் இறுதித்தூதர் நபிகள் நாயகம் அவர்களுக்கு எல்லாம்வல்ல இறைவனால் அருளப்பட்டு இறைவினை எட்டியது. அன்றுமுதல் இன்றுவரை இசுலாம் சமயத்தின் இறைவேதத்தில் எந்தவொரு சிறியமாற்றமும் ஏற்படவில்லை. இனி எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் ஏற்படப்போவதும் இல்லை என்பதில் இசுலாம் அழுத்தமான நம்பிக்கை கொண்டுள்ளது. காரணம், இதுவொரு இனத்தவருக்கோ குறிப்பிட்ட மொழியினருக்கோ உரிய மார்க்கமாக அருளப்பட்டதல்ல. மனிதசமூகத்தவர் முழுமைக்கும் சொந்தமான சமூக உறவு வாழ்க்கைத் திட்டத்தைப் பெற்றுள்ளது. அதனால்தான் இசுலாம் மார்க்கத்தில் பிறப்பால், நிறத்தால், வாழ்க்கைத் தரத்தால், குலத்தால் எவரும் உயர்ந்தவராகவோ, தாழ்ந்தவராகவோ கருதப்படுவதில்லை.

ஏக இறைவனைத் தவிர வேறு எவர் முன்னிலையிலும் அல்லது எதன் முன்னிலையிலும் எந்தவொரு மனிதனும் அடிபணியத் தேவையில்லை என்பதை இசுலாம் வலியுறுத்துகின்றது. எந்தவொரு தனிமனிதரும் எந்தவொரு காரணத்திற்காகவும் தம் சுயமரியாதையை இழப்பதை இசுலாம் எந்த சூழலிலும் ஏற்றுக் கொள்வதில்லை. இதனை வன்மையாக திருக்குர்ஆன் வசனங்கள் கண்டனம் செய்கின்றன.

ஒவ்வொரு தனிமனிதனும் பிறப்பு முதல் இறப்புவரை எதிர்கொள்ளும் எந்தப் பிரச்சனைக்கும் சமூக நல்லிணக்கத்தை மையப்படுத்தும் பொதுவான வாழ்க்கைத் திட்டத்திற்கு இசுலாம் எத்தனையோ கோட்பாடுகளை எடுத்துரைக்கிறது. அவற்றுள் முதன்மை வாய்ந்தது தவ்ஹீது கோட்பாடு ஆகும். இதுவே இசுலாமிய சமயத்தின் இயக்கத்திற்கு உயிர்நாடி என்று கூறலாம். இசுலாம் என்றால் ஒருவர் ஓரிறைக் கோட்பாட்டினை ஏற்று 'தொழுகை, நோன்பு, ஐக்காத், ஹஜ்' ஆகிய கடமைகளை மனதால் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும். எனவே, இவற்றை இசுலாம் கட்டாய கடமையாக்கியுள்ளது.

மனிதசமூகத்தின் வேற்றுமை உணர்வுகள் நீங்கி ஒற்றுமை தழைத்தோங்குவதற்கு அடிப்படையானதுமாக ஒவ்வொரு மனிதனும் தம் உள்ளத்தில் நிலைநிறுத்த வேண்டிய கருத்து நம்மையெல்லாம் படைத்து வழிநடத்தும் இறைவன் ஒருவன் இருக்கின்றான் என முழுமையாக நம்பி உணர்வுப்பூர்வமாக உண்மைக்கு உட்பட்ட நிலையில் கடமையாற்றுவதே ஆகும்.

ஒவ்வொரு மனிதனிடமும் அவனது உணர்வுடன் ஏதாவது ஒரு விதத்தில் இறை உணர்வு இரண்டறக் கலந்த நிலையில் இடம்பெற்றுள்ளது. இதனைத் தான் இஸ்லாம் 'தவ்ஹீத்' என்ற கோட்பாடாக 'கலிமாதையிபா' வின் முதல் சொற்றொடரில் விளக்கியுள்ளது. இது 'லாயிலாஹ இல்லல்லாஹ'; என்னும் அரபுத் தொடர் மூலமாக விளக்கப்படுகிறது. இதன் பொருள் 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை' என்பதாகும்.

இஸ்லாத்தின் இறைமை பற்றிய சிந்தனையின் அடித்தளமாக விளங்கும் இச்சொற்றொடர்தான் ஏகத்துவ இறைவழிபாடான தவ்ஹீத் கோட்பாடாக விளங்குகிறது. 'அல்லாஹ் தனித்தவன். அவன் அனைத்து ஆற்றல்களும் பெற்றவன். அவனுக்கு மட்டுமே நாம் வணக்கம் செலுத்துதல் வேண்டும்' என்று அவனை ஒருமைப்படுத்துவதற்குப் பெயர்தான் 'தவ்ஹீத்' ஆகும். இதனை திருக்குர்ஆன்,

*"அல்லாஹ் அவன் ஒருவனே, அல்லா எவரிடத்தும் தேவைகளற்றவன்.*
*அவன் எவரையும் பெறவுமில்லை. அவனுக்கு நிகராக எவருமில்லை."*

(திருக்குர்ஆன்.112: 1-4)

என உணர்த்துகிறது. 'இந்து சமயத்தில் இருந்து இஸ்லாத்தை வேறுபடுத்தும் அடிப்படைக் கூறாகவே தவ்ஹீது கோட்பாடு விளங்குகிறது.' இஸ்லாம் சமயம் இவ்வுலகில் பூரணத்துவம் பெறுவதற்கு முன்பே ஓரிறைக் கொள்கை இவ்வுலகில் நிலை பெற்றிருந்தது என்பதை சமய வரலாறுகள் உணர்த்துகின்றன. காலப்போக்கில் இந்தக் கொள்கை தன்னுடைய அழுத்தத்தையும், உறுதியையும் இழந்து மக்கள் வாழ்க்கையில் பல தெய்வ வழிபாடு இடம்பெற்று விட்டபோது இஸ்லாத்தின் ஏக இறை தவ்ஹீது கோட்பாடு தனித்துவம் மிக்கதாக வலுப்பெற்றது.

**இஸ்லாத்தின் தவ்ஹீது கோட்பாட்டின் மூன்று பிரிவுகள்**

இஸ்லாத்தின் 'தவ்ஹீது கோட்பாடு' மூன்று விதமான பிரிவுகளில் விளக்கப்படுகிறது. அவையாவன,

1. தவ்ஹீது உலூஹியா
2. தவ்ஹீது ரூபூபிய்யா

3. தவ்ஹீது அஸ்மாஸ்ஸிபாத்

அல்லாஹ் ஒருவன் மட்டும்தான் வணங்கப்படுவதற்கு உரியவன் என்று உறுதிப்பட நம்பி வணக்கங்கள் அனைத்தையும் அல்லாஹ் ஒருவனுக்கே செலுத்தி அவன் அல்லாத எவருக்கும் வணங்க மறுப்பதற்கான கருத்தே ‘தவ்ஹீத் உலூஹிய்யா’ எனப்படும். இதனை தவ்ஹீதுல் இபாதா என்றும் கூறுவர் ‘இபாதா’ என்றால் வணக்கம் என்று பொருள்படும். அல்லாஹ் ஏவியதை ஏற்று அவன் தடுத்தவற்றை செயல்படுத்தாமல் தவிர்த்து இருப்பதற்கு பெயர் தான் ‘இபாதா’ என்பதாகும். இதனை இஸ்லாம் ‘இறை உவப்பு’, ‘இறை அச்சம்’ என்ற கருத்தாக்கத்தில் அடக்குகிறது.

‘இறை உவப்பு’ என்பது இறைவனுக்கு மகிழ்ச்சியூட்டும் செயல்களையும் இறையச்சம் என்பது இறைவன் வெறுக்கின்ற செயல்பாடுகளையும் சுட்டுவதாகும்.

தவ்ஹீது கோட்பாட்டின் இரண்டாவது வகையான ‘தவ்ஹீத் ரூபூபிய்யா என்றால், ‘மரணித்தபின் உயிர்ப்பித்து மனிதர்கள் அனைவருக்கும் தீர்ப்பளிப்பவன் ஆகிய அனைத்து காரியங்களையும் ஒழுங்குபடுத்தக் கூடியவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே’ என்று ஏற்றுக்கொண்டு மனதார நம்புவதை சுட்டுவதாகும். இறைமறை இதனை,

> *“அல்லாஹ் தான் உங்களை படைத்தான் பின் உங்களுக்கு உணவு வசதிகளை அளித்தான் அவனே பின்னர் உங்களை மரிக்கச் செய்கிறான் பிறகு அவனே உங்களை உயிர்ப்பிப்பான் இவற்றில் ஏதேனும் ஒன்றை செய்யக் கூடியதாக உங்கள் இணை தெய்வங்கள் இருக்கிறதா அல்லாஹ் மிகவும் தூயவன் அவர்கள் இணை வைப்பதை விட்டும் மிகவும் உயர்ந்தவன்”* (திருக்குர்ஆன் 30:40)

எனக் குறிப்பிடுகிறது. அல்லாஹ் தன் திருமுறையில் தன்னைப் பற்றி எவ்வாறு வர்ணித்துள்ளானோ, மேலும் அவனுடைய தூதர்கள் எந்தெந்த நற்பெயர்கள், உயர் பண்புகள் ஆகியவற்றின் மூலம் அவனை புகழ்ந்துள்ளார்களோ அவையனைத்தையும் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உரித்தாக்குவது ‘தவ்ஹீதுல் அஸ்மாவஸ்ஸிபாத்’ எனப்படும்.

எனவே, இது அல்லாவின் மீது நம்பிக்கை கொள்ளுதல் என்பது வெறும் சமய தத்துவக் கருத்தல்ல. இது ஒரு வகையான ஒப்பந்தமாகும். அதாவது மனிதனைப் படைத்த இறைவன் மனிதவாழ்விற்கான அனைத்துச் சுதந்திரங்களையும் அளித்துள்ளான். அதனால் இறைவன் தன்னை நேர்மையாளனாகவும், தன்னை நம்புகிறவனாகவும் ,தம்மீது விசுவாசம் உள்ளவனாகவும் இருக்கின்றானா என மனிதனை சோதித்துப் பார்க்கின்றான். இச்சோதனையில் வெற்றி பெறுபவர்களுக்கு மறுமையில் சுவர்க்கத்தை அளித்து மகிழ்கின்றான். எனவே தான் படைத்த உயிரினம் தன்னை எண்ணிப் பார்த்து நம்பிக்கை கொள்வதை அல்லாஹ் எதிர்பார்க்கிறான். இக்கருத்தின் அடிப்படையில் ஏக இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுதலை வலியுறுத்தும் ‘தவ்ஹீது’ கோட்பாடு ‘லாயிலாஹ இல்லல்லாஹ்’ என்னும் சொற்றொடர் மூலமாக விளக்கப்பட்டுள்ளது. தவ்ஹீது கோட்பாட்டை ஏற்று வழி நடத்துவதை ஒவ்வொரு மனிதனுக்கும் கட்டாய கடமையாக்குகிறது இஸ்லாம். காரணம், ஏக இறை கோட்பாடான இதையே மனித இனத்தை வேற்றுமைகளை மறக்கச்செய்வது நல்லிணக்கத்தை நிலைநிறுத்த உதவும் அடிப்படை கருத்தாக

இசுலாம் வலியுறுத்துகிறது.

**தவ்ஹீது கோட்பாடு வழியில் சமூக ஒற்றுமை**

ஏக இறைவழிபாட்டின் மீது நம்பிக்கை கொண்டிருப்பவன் குறுகிய நோக்கம் உடையவனாக இருக்க முடியாது. இவ்வுலக உயிரினங்கள் அனைத்திற்கும் ஒருவனே மூல காரணம் என்ற கோட்பாடு ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இறைவன் படைத்த அனைத்து நிலையிலான படைப்புகளுக்கும் இடையே இடைவெளியை தோற்றுவிக்காது என்ற எண்ணத்தை தோற்றுவிப்பதுடன் அவற்றை அபிமானம், அன்பு, அறக்கோட்பாடு என்ற வட்டத்திற்குள் அடக்கி அவ்வட்டத்தின் ஒரு புள்ளியாக தம்மையும் அடக்கிப்பார்த்து அமைதியை நோக்கிய நல்லிணக்கத்திற்கு வாழ வகை செய்யத் தூண்டும். இதனைத்தான் ‘தவ்ஹீது கோட்பாடு’ நிறைவு செய்கிறது.

இஸ்லாம் எடுத்துக்கூறும் ஏக இறைவழிபாட்டுக் கோட்பாடு ஒவ்வொரு தனி மனித உணர்விலும் தன் நம்பிக்கையையும் தன் மானத்தையும் உள்ளடக்கிவிடும். இதனால் இறைவன் ஒருவனுக்கே கட்டுப்பட்டு நடக்கின்ற ஒவ்வொரு மனிதனையும் அவர்கள் துச்சமாக என்னும் மனப்போக்கை வளர்த்துவிடும். இதன் காரணமாக ஒவ்வொரு தனிமனித உணர்விலும் இறையச்சம், இறை உவப்பு என்ற கருத்தாக்கம் நிலைநிறுத்தப்பட்டு அறக்கோட்பாடு தழுவிய நல் உணர்வை வளர்ப்பதற்கு அடிப்படையாக அமைந்து விடுகிறது. ஏக இறைவழிபாட்டுக் கொள்கை தன்னம்பிக்கையை மட்டும் வளர்த்துக் கொள்ள உதவாமல் பணிவுடைமையையும் வளர்த்துக் கொள்வதற்கு பெரிதும் துணை நிற்கின்றது. சமூகத்தில் ஒவ்வொரு தனிமனித நெஞ்சத்திலும் பணிவுடமை நிலைநிறுத்தப்படும். ஆனால் அதுவே ஒருவரின் அகம்பாவத்தையும் சமூக ஒருமைப்பாட்டிற்கு எதிரான ஒருவரின் செயல்பாட்டையும் தடுத்து நிறுத்துவதற்கான வேலியாக அமைந்துவிடும்.

தனிநபர் ஒருவர் தமக்கு எந்தளவு பலம் எந்தெந்த அடிப்படையில் பெற்றிருந்தாலும் அவற்றை ஏக வல்லமை பொருந்திய இறைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டு உள்ளடக்கும் போது சமூக நல்லிணக்கத்திற்கு மாறாக தம் வல்லமையை பயன்படுத்த முற்படமாட்டார். காரணம் தான் பெற்ற வசதி ஆகிய அனைத்தையும் அளித்த எல்லாம் வல்ல இறைவன் எந்த நேரத்திலும் அவை முறைகேடாக பயன்படுத்தப்படும். ஆனால் அவற்றை எடுத்துக் கொள்ளும் வல்லமையும் பெற்றிருப்பான் என்று எண்ணி அச்ச உணர்வுடன் கலந்த இறை கோட்பாட்டினை நெஞ்சில் நிலை நிறுத்தி இருப்பார். இதன் காரணமாகவே தனிமனித வாழ்வில் தற்பெருமை இடம்பெறாது. சுயநலப்போக்கு தவிர்க்கப்படும் பொது நோக்கு பெருகும். இதன் பயனால் சமூக நல்லிணக்கம் பெருகுவதற்கான வாய்ப்பு ஏற்படும். மேலும் ஏக இறைக்கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருப்பவன் தன்னுடைய உள்ளத் தூய்மையையும் நன்னடத்தையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஏக வல்லமை மிக்க இறையின் அன்பினை பெற முயற்சி செய்வான். இதன் காரணமாக இதில் நம்பிக்கை உடைய ஒவ்வொருவரின் செயல்பாடுகளும் அறக்கோட்பாடு ரீதியாக சமூக நல்லிணக்கத்தை நிச்சயமாக ஏற்படுத்தும். இஸ்லாம் சமயம் எடுத்துக் கூறும் தவ்ஹீத் கோட்பாட்டின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் வாழ்வின் எந்த சூழலிலும் விரக்தி நிலைமை எட்டுவதில்லை. காரணம் இவன் நம்பிக்கை கொண்டிருக்கும் கோட்பாடு

அனைத்து ஆற்றல்களும் நிரம்ப பெற்றது என்ற நினைப்பே அவனுக்கு அசாதாரண பலத்தை வாழ்வில் ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக நிராசையும் ஏமாற்றமும் தனிமனித வாழ்வில் தவிர்க்கப்படுகின்றன.

சமூகத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. இறையச்சத்தின் பயனாய் சமூகத்திற்கு எதிரான நல்லுறவிற்கு முரண்பட்ட போக்குகள் செயல்பாடுகள் தடுத்து நிறுத்தப்படுகின்றன. அதே நேரத்தில் 'இறை உவப்பு' என்ற எண்ணத்தில் பயனாய் மனித செயல்பாடுகள் நன்மையின்பால் நாட்டம் கொண்டு நல்லிணக்கத்திற்கான வழி வகைகளுக்கு உறுதுணையாக அமைந்து விடும் என்பதில் இசுலாம் நம்பிக்கை கொண்டுள்ளது. இறை உவப்பு என்பது எப்போதும் தனிமனித செயல்பாட்டிற்குரிய தூண்டுதலாக இருப்பினும் அது சமூகத்தை மையப்படுத்தியதாகவும் எந்த ஒரு சமூகத்திற்கும் நன்மை பயப்பதாகவுமே இருக்கும். எனவே, எந்த ஒரு சமூகத்தையும் இன்னல்களுக்கும் இழிவுபடுத்தும் செயல்பாடுகளுக்கும் இஸ்லாம் எடுத்து கூறும் ஓரிறை கோட்பாட்டில் இடமில்லை.

**முடிவுரை**

இஸ்லாத்தில் சமூக வாழ்வின் மேம்பாட்டிற்கும் பொதுநலம் பேணும் உன்னத போக்கிற்கும் முதலிடம் தரப்படுகிறது. கோட்பாட்டினை மனதார முழுமையாக ஏற்று நடக்கும் ஒவ்வொரு மனிதனின் உணர்வுகள் ஆசைகள் கருத்தோட்டங்கள் எண்ணங்கள் விருப்பங்கள் அதன் விளைவான வெறுப்புகள் ஆகிய அனைத்துமே எல்லாம் வல்ல ஏக இறைவனின் விருப்பு வெறுப்புக்கு உட்பட்டுதான் இருக்கும். அவனிடம் அடிமை சிந்தனையோ பிறரை அடிமைப்படுத்தும் அகம்பாவம் ஏற்படாது. இதனால் மனிதர்களுக்கு இடையே பிணக்குகள் மறைந்து அன்புடன் வாழ வழி பிறக்கும். இதுவே ஒரு சமூகத்தின் ஒற்றுமைக்கான அடிநாதமாகவும் சமூக ஒற்றுமைக்கான பாலமாகவும் விளங்க முடியும் என்று இஸ்லாம் எடுத்துரைக்கிறது. இதனை வலியுறுத்துவதாகவே இஸ்லாத்தின் சகோதரத்துவ கோட்பாடும் அமைந்துள்ளது.

**பார்வை நூல்கள் :**

1. **அப்துற் - ரஹீம் - 'இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்' தொகுதி 1,2,3.**
   யுனிவர்ஸல் பிரிண்டிங் ஹவுஸ், 11 சுல்தான் தெரு, சென்னை. முதற்பதிப்பு - 1979
2. **அப்துல் ரகூப் பாகவி.ஆர்** (மொழிபெயர்ப்பு ஆசிரியர்) - **'அண்ணல் நபி'**
   இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட, சென்னை 12, முதற்பதிப்பு 1995
3. **அஜ்மல்கான்.பீ.மு., - 'இஸ்லாம் வரலாறும் தத்துவமும்'**
   அரசி பதிப்பகம், 18 திருமலைசாமி புரம், திண்டுக்கல், முதற்பதிப்பு – 1995.
4. **'திருக்குர்ஆன் மூலமும் தமிழ் விளக்கவுரையும்' ஆறாம் பதிப்பு (பாகம் 1,2)**
   இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், சென்னை – 12. முதற்பதிப்பு – 1995.
5. **எஸ்.எம்.ஹனிபா. இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி.**
   தமிழ் மன்றம், கண்டி, முதற்பதிப்பு 1982.